## <u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்துார், வேலூர் மாவட்டம்.</u>

## <u>சி.சி. 117/2022</u>

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 5 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருப்பதி | வயது | 39 |
| த.பெ.(அ)க.பெ. | மணி | தொழில் | மேஸ்திரி |
| ஊர் | மேற்கத்தியானுார் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் மேற்கத்தியானுார் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 எனது பெற்றோர். வழக்கின் எதிரிகள் எனது உறவினர்கள். எதிரிகள் குடும்பத்தாருக்கும் எங்களுக்கும் சொத்து சம்மந்தமாக சிவில் பிரச்சனை உள்ளது. இந்நிலையில் கடந்த 2020 ம் ஆண்டு எனக்கு தேதி மாதம் நினைவில்லை. அன்றைய தினம் மதியம் ஊரில் வழக்கின் எதிரிகளுக்கும், எங்களுக்குமிடையே பஞ்சாயத்து பேசினார்கள். எதிரிகள் பஞ்சாயத்திற்கு கட்டுப்படவில்லை. அந்த இடத்திலேயே எங்கள் குடும்பத்தாரை திட்டினார்கள். அடிக்க வந்தார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்து விட்டோம். அதன்பிறகு அன்றயை தினம் மாலை சுமார் 7.30 மணிக்கு எதிரிகள் எங்கள் வீட்டின் அருகே வந்து 1 ம் எதிரி எனது அப்பா அ.சா.1 – ஐ கொம்பால் அடித்தார். 2 ம் எதிரி ஆனந்தன் கைகளால் எனது அப்பாவை அடித்து கீழே தள்ளி அடித்தார்கள். அ.சா.2 எனது அம்மாவையும் 1 மற்றும் 2 எதிரிகள் தாக்கினார்கள். 3 ம் எதிரியும் எனது அம்மாவை அடிக்க வந்தார். எனது அப்பாவிற்கு வலது விலா எலும்பு பகுதியிலும் எனது அம்மாவிற்கு முதுகு பகுதியிலும் காயம் ஏற்பட்டது. திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து இருவரையும் சிகிச்சைக்கு சேர்த்தேன். சம்பவம் நடந்த சமயம் நானும் வீட்டில் தான் இருந்தேன் . எதிரிகள் எங்களை பார்த்து உங்களை ஒழிக்காமல் விடமாட்டேன் என்று கூறி மிரட்டியதால் நான் தள்ளி நின்று கொண்டேன். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை=

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.